ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2308/09 - 2022 නොවැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2022.11.29

2308/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: CHI/LND.1/AC/5/77.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/11/2019/H/231.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், ஆனைவிழுந்தான் பற்று சிறு பிரிவில், இல. 578 - பி பிட்டிபன வடக்கு கிராம அலுவலர் பிரிவில், சிலாபம் (பிரிவு இல. 8, மத்திய பிட்டிபன சிலாபம் நகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, புத்தளம் நில அளவையாளர் நாயகத்தினால் குருநாகல் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட 2022.10.27 ஆந் திகதிய, ஆ. வ. பு. 5559 ஆரம்ப வரைபடத்தில் பின்வரும் காணி துண்டின் பகுதி.

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: பள்ளியாவத்தை; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியவில்லை (சிலாபம், விஜய மாவத்தை, இல. 15 இல் வசிக்கும் ஜே. கே. சுமேதா நிகலஸ் சதருவன் பெரேரா பயன் படுத்தும்); விஸ்தீரணம்: 0.2925 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு சிலாபம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி. டபிள்யூ. எம். எம். எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2022, நவெம்பர் 23.

EOG 11 - 0336